www.newwisdomministries.com

# ஞா ன ஒ லி






## மனமாற்றமே மகிமைதரும்

ஞானம் 07 - ஒலி 02 - 14.01.2024

# நினைவே நனவாகும்





## தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

அன்பிற்கினிய எனதருமை சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்தில் என் அன்பான வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மிக சிறப்பாக உங்கள் அனைவருக்கும் தமிழரின் பெருவிழாவான பொங்கல் திருநாளின் இனிய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இனிய பொங்கலைப்போல, சுவைமிக்க கரும்பினைப்போன்று இனிதாகவும், வளங்கள் நிறைந்ததாகவும் நம் அனைவரின் வாழ்வு அமைய வேண்டுமென்று நான் பிரார்த்திக்கின்றேன். அப்படியே நடப்பதாக.

தினமும் நாம் குளித்து ஆரோக்கியமாக வாழ்கின்றோம். அதிலும் சிறப்பான பண்டிகை நாட்களில் நாம் வீடுகளையும், நாம் வாழும் சுற்றுப் புறத்தையும் சுத்தப்படுத்தி, வெள்ளையடித்து புதுபொலிவடையச் செய்து மகிழ்வோம். அந்த நாட்களில், சிறப்பான ஸ்நானம் செய்வோம். தலையில் எண்ணை தேய்த்து, உடம்பெல்லாம் அதைத் தடவி, உடம்பைக் குளிரச் செய்து, வேப்பிலைகள் ஊறிய வெந்நீரில் நன்கு குளித்து புத்துணர்ச்சி பெற்று மகிழ்வோம்.

குளியல் என்பது நமக்கும், பிறருக்கும் நல்லது அத்தியாவசியமானதும்கூட. ஒருவர் தினமும் குளிக்கிறார் என்றால், அவர் எல்லாவற்றிலும் சரியாகவும், திட்டமிட்டு செயல்படும் பண்புடையவர் என்றும் அறிந்துகொள்ளலாம். வாரத்திற்கு இரண்டு முறையோ, அல்லது மூன்று முறையோ குளிப்பவர் எதிலும் சரியானவராக இருக்க மாட்டார். எதையும் ஏனோதானோ என்று இருப்பவர் என்றும் அறிந்து கொள்ளலாம். தன்னையே பராமரிக்கத் தெரியாதவர், எதிலும் சரியாக இருக்கமாட்டார். ஏமாற்றுத்தனம் கொண்டவராகவும், எதிலும் அறம்பாராதவர் என்றுகூட அறிந்து கொள்ளலாம்.

ஆன்மீகவாதிகள் இந்த ஸ்நானத்தைக் குறித்து மிகவும் அக்கறை எடுத்துக்கொள்வர். அதிலும் அதிகாலையில் ஆற்றில் குளிப்பதை மிகச் சிறந்த சடங்காகவே செய்வார்கள். ஏனென்றால், அதிகாலையில் ஆற்றில் இறங்கி, தெய்வத்தைத் தொழுதுவிட்டு, முழுதாக நனையும் விதத்தில் தண்ணீரில் மூழ்கி, அழுக்கு தீர தேய்த்து குளித்துவிட்டு

கரையேறுவார்கள். அது குளிர் காலமானாலும், கடுமையாக குளிர் வாட்டினாலும், தங்களின் குளியல் சடங்கை எப்போதும் தவறாமல் செய்வார்கள். அந்த அளவுக்கு அவர்களின் ஆன்மீக ஒழுக்கம் உறுதியாக இருக்கும்.

அப்படிக் குளித்தால், அனைத்து சாபங்களும், பாவங்களும் நீங்கி சுத்தமாவார்கள் என்ற ஒரு நம்பிக்கை அவர்களுக்கு உண்டு.

ஒருமுறை ஒரு துறவி, இவ்வாறு அதிகாலையில் ஆற்றில் இறங்கி செபித்துவிட்டு குளித்தார். அப்போது அந்த ஆற்றின் கரையின் வழியாக ஒரு ஏழை விவசாயி தன் மாடுகளை ஓட்டிக்கொண்டு நடந்து சென்றார். அப்போது அவர் அந்தத் துறவியைப் பார்த்து, சாமி, இந்த அதிகாலைப் பொழுதில், அதுவும் கடும் குளிர் வாட்டும் இந்த நேரத்தில், கடுமையாகக் குளிர்ந்திருக்கும் தண்ணீரில் ஏன் குளிக்கின்றீர்கள், வீட்டிலேயே சுடுதண்ணீரில் குளிக்கலாமே என்று கேட்டார். அதற்கு அந்தத் துறவி, நீ ஒரு வயதான, படிப்பறிவில்லாத, ஏழை விவசாயி. உனக்கு இந்த ஆன்மீக அறிவெல்லாம் எங்கே புரியப்போகின்றது என்று ஏளனமாகச் சொன்னார். அந்த விவசாயி, அதுசரிங்க, அது என்னான்னு சொன்னா நானும் புரிஞ்சுக்குவேன் என்றார். அதற்கு அந்தத் துறவி...ஆறு புனிதமான நீரைக் கொண்டது. அதிகாலையில் ஆற்றில் இறங்கி, இறைவனிடம் வேண்டியபடி, அதில் முங்கிக் குளிக்கும்போது, நம் பாவங்கள், சாபங்கள் எல்லாம் ஆற்றோடு அடித்துப் போய்விடும் நாமும் பரிசுத்தம் ஆகிவிடுவோம் என்ற சொன்னார்.

அதற்கு அந்த சாதாரண விவசாயி, எனக்கு அவ்வளவு வெவரமெல்லாம் தெரியாது சாமி, ஆனா ஒண்ணு மட்டும் எனக்குத் தெரியும், நாம வீட்ல குளிச்சாலும், இப்படி ஆத்துல குளிச்சாலும், நம் உடம்புல இருக்குற அழுக்குவேனா போகும். ஆனா நம்ம பாவம், சாபம் எல்லாம் எப்படிப்போகும். வெளியில இருக்குற அழுக்கு வேணா, ஆத்துல அடிச்சிட்டுப் போகலாம், ஆனா நமக்குள்ள இருக்குற மன அழுக்கெல்லாம், அதான் நீங்க சொன்ன பாவமெல்லாம் எப்படிப் போகும், நீங்க சொல்றமாதிரி, பாவம், சாபத்தையெல்லாம் இந்த ஆறு அடிச்சிட்டுப்போகும்போது, அதோட சேத்து நீங்க சேத்து வச்சிருக்குற புண்ணியங்களும் சேத்து அடிச்சிட்டுப் போகாதா? கழுவுற தண்ணீ, பாவத்த மட்டும் கழுவுமா?...புண்ணியத்த மட்டும் தனியா விட்டுட்டுப் போறமாதிரி, அதுக்கு சிந்திக்கத் தெரியுமா நம்மள மாதிரி? என்று கேட்டார். நீங்க வேணா, இங்க இப்படிக் குளிச்சா? பாவம் போகும்ணு நினைக்காலாம்,... ஆனா...அதெல்லாம் அப்படி ஒண்ணுமில்லைங்க சாமி..புற அழுக்கப் போக்க ஒரு வழி, ஆனா அக அழுக்கப் போக்க வேற வழியிலதான் முடியும்...இது தெரியாதுங்களா?


ஏதோ மனதிருப்திக்காக இப்படி நீங்க நெனச்சுக்கிட்டிருக்கீங்க...இந்தத் தப்பான நெனப்போட எத்தன வருஷம் இந்த ஆத்துல குளிச்சாலும், உங்களுக்கு விமோஜம் கிடைக்கவே கிடைக்காதுங்க சாமி, ஏதோ இந்தப் பாமரப்பய எனக்குத் தெரிஞ்சத சொல்றேங்க சாமி,.தப்பான நினெப்புதான் பொழப்ப கெடுக்கும்க, தப்பா சொல்லியிருந்தா என்ன மன்னிச்சிடுங்க சாமி என்று அவர் துறவியப் பாத்து சொன்னார்.

அப்போது, அந்தத் துறவி, ஐயா, என் ஞான குருவே, மனவிடுதலைக்கு வழி சொன்னவரே உங்களின் ஞான உபதேசத்தின் மூலமாக எனது உயிரை திருமுழுக்காட்டிவிட்டீர்கள் அதற்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன் என்று அந்த விவசாயின் பாதங்களைத் தொட்டு வணங்கினார்.

அன்பிற்கினியவர்களே, நம் மீட்புக்கான வழிகள் எப்போது, யாரால், எப்படி கிடைக்கும் என்று நாம் அறிவது மிக அரிது. ஆனால், இறைவன் நம்மைக் குறித்து நம்மைவிட மிகக் கவனமாய் இருப்பார். கண்ணின் கருவிழிபோல நம்மைக் கண்காணிப்பார். தேவையான நேரத்தில் நமக்கான அனைத்தையும் கொடுப்பார். ஆயுள் உள்ளவரை அவரில் இணைந்து வாழ்ந்தால். மீட்பு சுலபமாய் கிடைக்கும்.

# விவிலியம் அறிவோம்





## இணைச்சட்டம் 25

இச 25:1-3 வரையுள்ள இறைச் சொற்றொடர்கள் மனித மாண்பும் தண்டனையும்பற்றிப் பேசுகின்றன. முரண்பாடுகள் நிறைந்த ஒரு சமூகத்தில் சட்ட மோதல்கள் உருவாகும்போது நீதி அமைப்பிற்கு எடுத்துச் செல்லவேண்டியது அவசியமாகிறது. இந்த அமைப்பு ஒரு வழக்காடு மன்றமாக மாறுகிறது. அங்கே நீதிபதி வேண்டும்; வழக்குகளை வாதிடுவதற்கான ஒரு இடம் வேண்டும். கிராமங்களில் இந்த அமைப்புகள் இருக்காது. எனவே கிராமங்களில் உள்ள மூப்பர்கள் முன்னிலையில் நகரின் வாயிலில் அல்லது போரடிக்கும் களத்தில் வழக்குகள் விவாதிக்கப்பட்டன (காண் இச 21:18-21; ரூத்து 4:1-12). நகரங்களில் அரசால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் இருந்தார்கள். அவர்கள் கிராமங்களில் தீர்த்துவைக்கப்படாத வழக்குகளைக் கேட்பார்கள் (இச 17:9-10); அல்லது அவர்களின் எல்லைக்குட்பட்ட வழக்குகளைக் கேட்டு நீதி வழங்குவார்கள் (2 சாமு 15:3; எரே 26:10-19). நீதிபதிகளாகச் செயல்படுபவர்கள் சாட்சிகளுக்குச் செவிகொடுக்க வேண்டும்; சட்டத்தின் ஒளியில் ஒரு தீர்ப்பை வழங்கவேண்டும். தீர்ப்பின் அடிப்படையில் தண்டனை நிறைவேற்றப்படுவதை கண்காணிக்க வேண்டும்.

பண்டைய மேற்காசிய நாடுகளில் பல குற்றங்களுக்கும் கசையடிகள் வழங்குவது பழக்கத்தில் இருந்தது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் கசையடிகள் வழங்கலாம். குற்றத்தைப் பொறுத்துக் கசையடிகளின் எண்ணிக்கை இருக்கும். மேற்காசிய நாடுகளின் சட்டங்களில், குறிப்பாக அமுராபி சட்டத்தில், குற்றத்திற்கேற்றவாறு இருபதிலிருந்து அறுபது கசையடிகள் வரை கொடுக்கலாம். இணைச்சட்ட விதிகள் அதிகபட்சமாக நாற்பது கசையடிகள் வழங்கலாம் எனக் கூறுகிறது. ஒரு குற்றவாளி தண்டிக்கப்படும்போது குற்றவாளியின் மாண்பு காக்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் அவனை அடிக்கச் செய்வது நேர்மையற்ற விதத்தில் அவன்

பழிவாங்கப்படுவதைத் தவிர்க்கிறது. பண்டைய உலகில் உடல் ரீதியான தண்டனைகள் பிறரை எச்சரிப்பதற்காகவும் குற்றவாளியின் குடும்பத்தினர் அவமானப்படுவதற்காகவும் பொது வெளியில் கொடுக்கப்பட்டன. இன்றைய சமூகத்தில் அவை ஏற்றுக்கொள்ள முடியாதவைகாளக இருக்கலாம்; அன்றைய கலாச்சாரப் பின்னணியில் இவற்றை நாம் அறிந்துகொள்ள முயலவேண்டும்.

இச 25:4 போர் அடிக்கும் மாட்டின் வாயைக் கட்டாதே எனக் கூறுகிறது. பண்டைய உலகில் மாடுகள் மிகவும் மதிப்பிற்குரிய விலங்குகளாகவும், சமூக அந்தஸ்தை வெளிப்படுத்துபவனாகவும் இருந்தன. எனவே மாடுகள் வைத்திருப்பவர்கள் செல்வந்தர்களாகக் கருதப்பட்டார்கள். சிறிய விவசாயிகள் மாடுகள் வைத்திருப்பதில்லை. அவர்கள் செல்வந்தர்களிடமிருந்தோ, அரசிடமிருந்தோ வாடகைக்குப் பெற்றுப் பயன்படுத்தினார்கள். மாடுகள் நிலங்களை உழுவதற்கும், கதிரடிப்பதற்கும், போரடிப்பதற்கும், அறுவடை செய்த தானியங்களை உடைப்பதற்கும், இன்னும் பயிர்த் தொழிலுடன் சம்பந்தப்பட்ட பல வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டன. அறுவடை செய்யப்பட்ட தானியங்கள் கதிரடிக்கப்பட்டபின் அவைகளில் மீதமிருக்கும் தானியங்களை எடுப்பதற்காகப் போரடிப்பார்கள். அப்போது பயன்படுத்தப்படும் மாடுகளின் வாயைக் கட்டாதே என்று கூறும் இச்சட்டம் மனிதாபிமானத்துடன் விலங்குகள் நடத்தப்படவேண்டும் என்பதைக் கூறுகிறது. புதிய ஏற்பாடு இச்சொற்றொடரை ஆதாரமாகக் காட்டிக் கடவுளின் ஊழியர்களாகப் பணிசெய்பவர்களுக்கு சமூகங்கள் உதவ வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன (1 கொரி 9:9; 1 தீமோ 5:18).

இச 25:5-10 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் உடன்பிறந்தோன் கடமைபற்றிப் பேசுகின்றன. இந்தப் பழக்கம் திருமணம் ஆனபின் குழந்தையில்லாமல் இறக்கும் ஒருவனுக்கு வாரிசை உருவாக்குவதுடனும், இறந்தவனின் பெயரும் அவனது உரிமைச் சொத்தும் நெருங்கிய உறவினர் மூலமாக நிலைத்திருக்க வேண்டும் என்ற சிந்தனையையும் ஆதாரமாகக் கொண்டது. அதே வேளையில் அவனுடைய இறப்பால் கைம்பெண்ணான பெண்மணி பாதுகாப்புடன் வாழவும் வகைசெய்கிறது. இந்தப் பாடம் இரண்டு பகுதிகளைக் கொண்டதாக உள்ளது. முதல் பகுதியில் (25:5-6) திருமணம் ஆன ஒரு பெண் கணவன் இறந்த பின்னும் புகுந்த வீட்டிலேயே தொடர்ந்து வாழ வழிசெய்யப்பட வேண்டும்; அவளுக்குத் தேவையான பொருளாதாரப் பாதுகாப்புகள் செய்யப்பட வேண்டும் என்பது கூறப்படுகிறது. இரண்டாவது பகுதியில் (25:7-10) உடன்பிறந்தோன் கடமையைச் செய்ய மறுப்பவன்பற்றிக் கூறப்படுகிறது. இங்கே உடன்பிறந்தோன் எனக் குறிப்பிடப்படுபவர் சொந்த சகோதரராகவோ, நெருங்கிய உறவினராகவோ இருக்கலாம்.

இறந்துபோன சகோதரனுக்குச் செய்யவேண்டிய கடமை பொருளாதாரச் சுமைகளையும் கொண்டதாக உள்ளது. எனவே சகோதரன் அல்லது நெருங்கிய உறவினர் உடன்பிறந்தோன் கடமையைச் செய்வதற்கு மறுக்கலாம். அந்தச் சூழ்நிலையில் கணவனை இழந்த அந்தக் கைம்பெண் அவள் விரும்புகின்ற ஒருவனைத் திருமணம் செய்யலாம்.

உடன்பிறந்தோன் கடமையைச் செய்வதற்கு இறந்தவனின் நெருங்கிய உறவினர் மறுத்தால் அவன் நகர வாயிலில் அமர்ந்திருக்கும் தலைவர்களிடம் அழைத்துவரப்பட்டு, அவர்கள் முன்னிலையில் அவமானத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும் எனச் சட்டம் கூறுகிறது. ஒரு நகரத்தில் நகர வாயில் மிகவும் முக்கியமான இடம். மக்கள் வேலைகளுக்காக வெளியெ செல்வதற்கும் உள்ளே வருவதற்கும் நகர வாயிலைத்தான் பயன்படுத்த வேண்டும். எனவே நகர வாயிலில் மக்கள் வருவதும் போவதுமாக இருப்பார்கள். நகர வாயில்; பொருள்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் பயன்படும் சந்தைத் திடலாகவும் பயன்படுத்தப்பட்டது. அரசினால் நியமிக்கப்பட்ட நீதிபதிகளும் நகர வாயிலில் அமர்ந்திருப்பார்கள்; எனவே நகர வாயில் வழக்காடும் நீதிமன்றமாகவும் செயல்பட்டது. உடன்பிறந்தோன் கடமையைச் செய்ய மறுப்பவன் அங்கே அழைத்துவரப்படுகிறான். நகரத் தலைவர்களின் முன்பாக அவனது அண்ணி அவன் காலிலுள்ள மிதியடிகளைக் கழற்றி, அவன் முகத்தில் துப்புகிறாள். அதன்பின் தன் சகோதரனின் வீட்டைக் கட்டாதவனுக்கு இப்படியே செய்யப்படும் என்கிறாள். அவளது செயல் அவள் குற்றமற்றவள்; அவளது கொழுந்தனே குற்றவாளி என்பதை பொது வெளியில் வெளிப்படுத்துவதாக அமைகிறது. அவனது காலிலுள்ள மிதியடிகளைக் அவள் கழற்றுவதும் அவன் முகத்தில் துப்புவதும் அடையாளச் செயல்கள். பண்டைய மேற்காசிய நாடுகளில் நில அளவைகள் மிதியடிகளுடன் ஒருவன் நடப்பதை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டது. உதாரணமாக, ஒரு மணிநேரம், ஒரு நாள், ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் மிதியடிகளுடன் நடப்பது கணக்கிடப்பட்டது. நிலம் முக்கோண வடிவில் அளக்கப்பட்டது. வயல் கற்கள் எல்லைகளைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன (இச 19:14). நிலத்தில் மிதியடிகளுடன் நடந்ததால் மிதியடிகள் நிலத்தின் உரிமையைக் காட்டுகின்ற பத்திரங்களாகப் பார்க்கப்பட்டன. பாதுகாவலரின் மிதியடிகளைக் கழற்றுவது, அவள் வீட்டுக்குச் சொந்தமான நிலத்தின்மீது அவனுக்கு இருக்கும் அதிகாரத்தைக் கழற்றுவதாகப் பார்க்கப்பட்டது. முகத்தில் துப்புவது அவனை அவமதிக்கும் செயல் (யோபு 30:10; மாற்கு 15:19). தொநூ 38:8-18 உடன்பிறந்தோன் கடமையைச் செய்யாத ஓனான் கடவுளால் கொல்லப்படுவதைக்கூறுகிறது.

இச 25:11-12 இரண்டு ஆண்களுக்கிடையில் சண்டை நடக்கும்போது ஒரு பெண் குறுக்கிடுவதைப்பற்றிப் பேசுகிறது;

குறிப்பாகத் தன் கணவனுக்கு உதவி செய்யும் நோக்குடன் எதிரியின் ஆண் குறியை பிடிப்பதைக் குற்றமாகக் கருதுகிறது. அவளது கையைத் துண்டிக்கக் கட்டளையிடுகிறது. அந்தப் பெண்மணியின் செயல் தனது கணவனுக்கு உதவுதாக இருந்தாலும் இன்னொரு ஆண் மகனின் ஆண் குறியைப் பிடிப்பது அவளுக்கும் அவளது கணவனுக்கும் அவமானத்தை ஏற்படுத்துகின்ற செயலாகவும் பார்க்கப்படுகிறது. அவள் ஒரு பாலியல் குற்றத்தைச் செய்வதாவும் இச்செயல் பார்க்கப்படுகிறது. எனவேதான் அவள் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறாள். இன்றைய வாசகர்களுக்கு இந்தச் சட்டம் மிகவும் கொடியதாகத் தெரியலாம். இந்தச் சட்டத்தின் நோக்கம் ஒவ்வொரு பாலினத்தைச் சார்ந்தவர்களும் அவரவர்களின் எல்லைக்குட்பட்டே செயல்பட வேண்டும் என்ற சிந்தனையை மையமாகக் கொண்டது. இன்றும்கூட பல கலாச்சாரங்களில் இந்தச் சிந்தனைகள் உள்ளன. இங்கே கொடுக்கப்படும் கொடிய தண்டனை குற்றத்தின் தீவிரத்தை வெளிப்படுத்துகிறது. கைகளைத் துண்டிப்பது, குறிப்பாக வலது கையைத் துண்டிப்பது, ஒருவரை சமூகத்தில் தீண்டத்தகாதவராக மாற்றுவதைக் குறிக்கிறது; அவர் ஒரு கொடிய குற்றத்தைச் செய்தவர் என்பதை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

இச 25:13-16 வரையுள்ள இறைச் சொற்றொடர்கள் ஏமாற்று எடைக் கற்களைப்பற்றிப் பேசுகின்றன. பணம் பரிவர்த்தனை இல்லாத ஒரு சமூகத்தில் வணிகம் எடைக் கற்களையும் அளவுக் கருவிகளையும் மையமாகக் கொண்டுதான் நடத்தப்பட்டது. ஒரு வணிகன் பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் வித்தியாசமான எடைக்கற்களைப் பயன்படுத்துகையில்; அவன் பொருள்களை விற்பவர்களையும் வாடிக்கையாளர்களையும் ஏமாற்றுகிறான். அறிவியல் வளர்ந்து அனைத்தும் நவீனமயமாக்கப்பட்ட இந்தக் காலத்திலேயே பலவிதமான ஏமாற்று வழிகள் பின்பற்றப்படுவதைக் காண்கிறோம். இன்றிருப்பதுபோல எடைகற்கள் அல்லது மின்னணு இயந்திரங்கள் இல்லாத காலத்தில் ஏமாற்று எடைகற்களைப் பயன்படுத்தி சந்தைகளில் மக்களை ஏமாற்றுவது அதிகமாக இருந்தது (ஆமோஸ் 8:5). பேரம் பேசி பொருள்களை வாங்குவது சாதாரண நடைமுறையாகவே இருந்தது. இணைச்சட்டம் வணிகர்கள் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இது சமூகத்தில் நேர்மையும் நியாயமும் நிலவ வேண்டும், மக்கள் நடுவில் நல்லிணக்கம் நிலவவேண்டும் என்ற விருப்பத்தையும் வெளிப்படுத்துகிறது.

இச 25:17-19 வரையுள்ள இறைச் சொற்றொடர்கள் அமலேக்கியர்களின் துரோகச் செயல்களை நினைவு கூர்ந்து அவர்களை அழித்தொழிக்கக் கட்டளையிடுகிறது. அமலேக்கியர்கள் ஒரு நாடோடி இனத்தவர். இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து வெளியேறி சீனாய் பாலைவனத்தில் பயணிக்கும்போது முதலில் அமலேக்கியர்களைச் சந்திக்கிறார்கள். அவர்கள் இஸ்ரயேல் மக்களை வரவேற்கவில்லை மாறாக அவர்களுக்கெதிராகப் போர்

செய்கிறார்கள். இஸ்ரயேல் மக்கள் அமலேக்கியர்களை அழித்தொழிப்பதற்கு எடுத்த முயற்சிகள் முழுவதுமாகப் பலன்தரவில்லை என்றே கூறவேண்டும் (விப 17:8-13; 1 சாமு 15:2-3). மீண்டும் மீண்டும் இஸ்ரயேலின் எதிரிகளாக அவர்களை விவிலியத்தில் சந்திக்கிறோம் (நீத 6:3; 1 சாமு 30:1; 2 சாமு 8:12; 1 குறி 4:43). பாலைவனப் பயணத்தின்போது இஸ்ரயேல் மக்களுக்கு அவர்கள் உதவவில்லை என்பதுதான் இந்தப் பகைக்கு ஆதாரமாக உள்ளது. காலப்போக்கில் வேறு காரணங்களும் இணைந்திருக்கலாம். இஸ்ரயேலில் முடியாட்சி நிலவிய காலக் கட்டத்தில் அமலேக்கியர்கள் முழுவதுமாக அழிக்கப்படுகிறார்கள்.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ்.cmf






அருட்தந்தை.ஸ்டீபன் கஸ்பார்.
பங்குத் தந்தை, புனித.திருமுழுக்கு யோவான் ஆலயம், சின்னாளபட்டி, திண்டுக்கல் மறைமாவட்டம்


# பொதுக்காலம் 2ம் ஞாயிறு - 14.01.2024

## 1 சாமுவேல் 3/3-10, 19, 1 கொரிந்தியர் 6/13-15, 17-20, யோவான் 1/35-42

இறை இயேசுவில் எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, கடந்த ஞாயிறு அன்று தந்தை கடவுள் ஆண்டவர் இயேசுவை யூதரல்லாத புற இனத்தவருக்கு மூன்று அரசர்கள் (ஞானிகளுக்கு) வெளிப்படுத்திய விழாவைத் திருக்காட்சி விழாவாகக் கொண்டாடினோம். இன்று தந்தையால் தரணிக்கு அனுப்பப்பட்ட ஆண்டவர் இயேசுவை இன்றைய இறைவார்த்தைகள் வழியாக நம்மால் அறிய முடிகிறது. நமக்கு அவர் அறிமுகமாவதை நம்மால் உணர முடிகிறது. இயேசு என்னில் எப்பொழுது அறிமுகமானார் என்ற கேள்விக்கு விடையைத் தேடுவோம். நம்மைப் பெற்றெடுத்த நம் பெற்றோர் நாம் குழந்தைகளாய் இருந்தபோது, நமக்குக் கடவுள் இறைவன் ஆண்டவர் எனச் சொல்லிக் கொடுத்தனர். எப்படிச் சிலுவை அடையாளம் வரைவதெனச் கொடுத்தார்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே அருட்சகோதரிகள், அருட்தந்தையர் மூலம், படங்கள், கதைகள் வடிவில் நமக்குக் கடவுள் பற்றிய அறிமுகத்தை ஊட்டி வளர்த்தார்கள். இவ்வாறு நம் வாழ்வில் கடவுள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். அறிமுகமான அந்தக் கடவுளை நாம் அனுபவிக்க அவரைத் தேடுபவர்களாய் நாம் மாறவேண்டும். தேடல் என்பது நம் வாழ்வில் அவசியம். தேடிக்கண்டுபிடித்து அவரை அனுபவித்தல் அவசியம். அனுபவித்தவரை அறிவிக்காமல் இருக்க முடியாது.

யோவான் நற்செய்தயில் 4ம் அதிகாரத்தில் இயேசு யாக்கோபின் கிணற்றுத் திட்டில் அமர்ந்திருக்கின்றார். சமாரியப் பெண், ஒருவகையில் பாவிப்பெண், மட்டமதியம், நீர் மொள்ள குடத்துடன் கிணறு நோக்கி வருகிறாள். இயேசு அவளிடம் குடிக்கத் தண்ணீர் கேட்கிறார். இருவரிடையே உரையாடல் தொடர்கிறது. உரையாடலில் சமாரியப் பெண் இயேசுவை இறைவாக்கினராக, படிப்படியாக அவரை மெசியாவாக அறிகிறாள். மெசியா அனுபவம் பெற்ற அவளால் அமைதியாக இருக்க முடியாது. குடத்தை அங்கேயே போட்டுவிட்டு சமாரியர் ஊருக்குள் சென்று சமாரியர்களிடம் மெசியாவைக்காண வாருங்களென அறிவித்து சமாரியர்களை இயேசுவிடம் அழைத்து வந்ததை நம்மால் பாரக்க முடிகிறது.

இன்றைய முதல் வாசகத்திலே ஆண்டவரின் இல்லத்தில் உறங்கிக் கொண்டிருந்த சாமுவேலை இறைவன் அழைக்க அது இறைக்குரல் என்று தெரியாமல் தன் குருவான ஏலியிடம் சென்று என்னை அழைத்தீர்களா? எனக் கேட்டான். ஏலியால்கூட இது இறைவனின் அழைப்பு என உணரமுடியவில்லை. மூன்றாம் முறையாக சாமுவேலை கடவுள் அழைக்க அவன் மீண்டும் ஏலியிடம் அடியேனை நீங்கள் அழைத்தீர்களா?

எனக் கேட்டான். இப்பொழுது ஏலி இது இறைவனின் குரல் என அறிந்து கொண்டு, இறைவனுக்கு இதோ வருகிறேன் எனச் சொல்லச் சொல்லத் தருகிறார். அழைப்பது கடவுள் என அறிந்தபொழுதே தன்னை அடியானாககி இறைப்பணி செய்ய முன் வருகிறான் சாமுவேல்.

ஆம் இன்றைய முதல் வாசகத்தில் இறைவன் சாமுவேலுக்கு அறிமுகமானதுபோல, இன்றைய நற்செய்தியிலே யோவான், அந்திரேயா என்ற இரு சீடரோடு திருமுழுக்கு யோவான் நிற்கையில், அவ்வழியாக இயேசு கடந்து செல்வதைப் பார்த்த திருமுழுக்கு யோவான் தம் சீடர்களைப் பார்த்து, இதோ ஆட்டுக்குட்டி எனச் சொல்லி, இயேசுவை அறிமுகப்படுத்துகிறார். அவர்கள் இருவரும் இயேசுவைப் பின்செல்ல, இயேசு அவர்களைத் திரும்பிப் பார்த்து என்ன தேடுகிறீர்கள்? எனக்கேட்டார். அவர்களோ, ரபி நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்ற கேள்வியைக் கேட்டனர். உண்மையான தேடலிலிருந்த சீடர்களுக்கு வந்து பாருங்கள் என அழைப்பை விடுத்தார். சென்றார்கள். அவரோடு தங்கினார்கள். இயேசுவோடு தங்கிய அவர்களது அனுபவம் விவரிக்க இயலாத அனுபவமாக அவர்கள் வாழ்வில் மாறிவிடுகிறது. அந்திரேயா மறுநாள், பேதுருவைச் சந்தித்து, நாங்கள் மெசியாவைக் கண்டோம். அனுபவம் பெற்றோம் எனச்சொல்லி, தங்கள் அனுபவத்தை அவரும் பெற அவரை இயேசுவிடம் அழைத்து வந்தார் என அறிகிறோம். அதேபோல கிரேக்கர் சிலரையும் அவரிடம் அழைத்து வருவதையும் நற்செய்தியில் காண முடிகிறது. இவர்களுக்கும் இயேசுவை அந்திரேயா அறிமுகப்படுத்துகிறார்.

ஆம் அன்பானவர்களே, புனித.ஜான் கிறிஸ்சோஸ்தம், ஒரு கிறிஸ்தவன் தான்பெற்ற நம்பிக்கையை அதைப் பெறாதவரோடு பகிர்ந்து கொள்ளாமல் இருக்கவே முடியாது என்கிறார்.

ஆம் அன்பானவர்களே, அறிமுகமானவரை அறிவிக்க வேண்டுமென்றால், அனுபவம் அவசியம். இன்று நாம் வாழும் உலகில், இறைவனை நம் குடும்பங்களில் அறிமுகம் செய்ய வாய்ப்புகள் உண்டா? நம் பிள்ளைகள் ஞானக்கல்விபெற பெற்றோர் முயற்சி எடுக்கிறோமா? இரவு பகலாக விழிக்கவைத்து, படிக்கவைக்கிறோம். டாக்டர் ஆகணும, இஞ்சினியர் ஆகணும், கைநிறைய காசு பணம் சம்பாதிக்க வைக்கணும என்ற மனநிலையில் இருந்தால், பெற்றோரே, பெரியோரே,

உங்களுக்கு உங்கள் பிள்ளைகட்கு கடவுளைப்பற்றிய ஞானத்தை அறிவைத்தர, கிடைக்க ஏற்பாடு செய்ய மாட்டீர்கள். இதற்கு முதலில் பெற்றோர் இறைக்குரலை கேட்கவேண்டும். இறையனுபவம் பெறவேண்டும். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு அனுபவம் வாயிலாக அறிமுகமாகும் இறைவனை அறிந்து அனுபவித்து அறிவிக்க நமக்குத் தாராள உள்ளம் வேண்டும். மனமாற்றமே இதை நம்மில் உருவாக்கும். கடந்த நூற்றாண்டில் வாழ்ந்து புனிதையாயிருக்கும் அன்னைத் தெரேசாள் இறைவனின் குரலை அவர் தியானம் டார்ஜிலிங்கு புகைவண்டியில் பயணித்தபோது சேரிவாழ் மக்களுக்கு உன்பணி தேவை என்ற இறைக்குரலுக்கு ஆகட்டும எனச் சொல்லி, அன்பின் சகோதரிகள் என்ற சபையை உருவாக்கி மக்கள் பணியைச் சிறப்பாகச் செய்தார். புனிதையாக்கப்பட்டார்.

உயிர்த்த கிறிஸ்துவை உச்சரித்தவர்களைக் கொன்று குவிக்க தமஸ்கு நகர் நோக்கிச் சென்ற சவுலை இறைவன் இடியின் ஒலியில் சந்தித்து அவரைப் பவுலாக மாற்றினார். அவர் இனிவாழ்பவன் நானல்ல, இயேசுவே என்னில் வாழ்கிறார் எனச் சொன்னார். கிறிஸ்துவை ஆதாயமாக்க எல்லாவற்றையும் குப்பையெனக் கருதுகிறேன் என்றார். கிறிஸ்துவதைத் தனதாக்கினார்.

புனித இஞ்ஞாசியார் மூலமாக (மத் 16/16) மனிதர் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வை இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயனென்ன என்ற இறைவார்த்தையைப்பெற்று நாடு கடந்து, மொழி கடந்து, இனம், மொழி கடந்து இந்திய மண் மிதித்து, இயேசு அனுபவத்தை, இயேசுவை கேரளா, ஜப்பான், சீனா, கடற்கரை மக்களுக்கு 16ம் நூற்றாண்டில் அறிவித்தார் புனித.சவேரியார்.

இந்த நற்செய்தியை அனுபவித்து, அறிவிக்க நாம் ஒவ்வொருவரும் அழைக்கப்படுகிறோம். மனம்மாறி நற்செய்தியை அறிவோம், அனுபவிப்போம், அறிவிப்போம்.



# பொதுக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு

1சாமு. 3 : 3-10, 19 1கொரி. 6 : 13-15, 17-20

யோவா. 1 : 35-42




பா. சேவியர்

திண்டுக்கல்


14-01-2024

## திருப்பலி முன்னுரை

ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கிறேன் என்று இறைவார்த்தைகளைக் கேட்டு தியானிக்க வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் பொது காலத்தின் இரண்டாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்றைய திருவழிபாடு இறை அழைத்தலின் மேன்மையை நமக்குச் சுட்டிக் காண்பிக்கிறது.

ஆபிரகாமை இறைவன் அழைத்தபோது "அடியேன் தயார்" என்றார். மோசேயை அழைத்தபோது "இதோ இருக்கிறேன்" என்றார். மரியாவை அழைத்தபோது "நான் ஆண்டவரின் அடிமை" என்றார். சாமுவேலும் தம்மை அழைத்த இறைவனுக்கு "இதோ இருக்கிறேன்" என்கிறார். அதே ஆண்டவர் இன்று இத்திருப்பலி வழியாக நம் ஒவ்வோருவரையும் பெயர் சொல்லி அழைக்கிறார். அவரது அழைப்பை ஏற்று, அவரது வார்த்தைகளைக் கேட்டு வாழ நாம் தயாராவோம்.

நாம் ஒவ்வொருவரும் இறைவனுக்குச் சொந்தமான மணிப் பேழை, தூய ஆவியார் வாசம் செய்யும் ஆலயம் என்பதை உணர்ந்து அதற்குரிய மரியாதையைத் தருகிறோமா? "வாருங்கள், வந்து பாருங்கள்" என்று அழைக்கும் ஆண்டவரின் அழைப்பை ஏற்று அவரைப் பின்தொடர்கிறோமா? அவரை தரிசிக்க ஆவல் உள்ளவராய் இருக்கிறோமா? என்ற கேள்விகளை முன்னெழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

"வாருங்கள், வந்து பாருங்கள்" என்று அழைக்கும் இறைமகன் இயேசுவை அருள்வாக்கு அடையாளங்கள் வழியாகச் சந்தித்து, இறை அனுபவம் பெற்று வாழ இத்திருப்பலி வழியாக இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

ஆலயத்தில் சாதாரண பணி செய்த சிறுவன் சாமுவேலை அரசர்களைத் திருப்பொழிவு செய்கின்ற மாபெரும் பணிக்கு இறைவன் அழைக்கும் திருநிகழ்வே இன்றைய முதல் வாசகம். மனுக்குலத்தை மீட்க விரும்பும் இறைவன் அதனை சாதாரண மனிதர்கள் வாயிலாகவே நிறைவேற்றுகிறார் என்பதை விளக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

பவுலடியாரின் போதனைகளைத் தவறாகப் புரிந்துகொண்டு, தம் விருப்பம்போல் ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபட்ட கிறிஸ்தவர்களை, அவர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள உறவைச் சுட்டிக் காண்பித்துத் திருத்துவதை இவ்வாசகம் விளக்குகிறது. நாம் கிறிஸ்துவின் மதிப்பீடுகளுக்குச் சான்று பகர்ந்து ஒழுக்கத்துடன் வாழ அழைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.


## மன்றாட்டுகள்

1) வாருங்கள் என்று பெயர் சொல்லி அழைக்கும் அன்பு இறைவா, உமது அழைப்பை ஏற்று உமது திருவுளத்தை நிறைவேற்ற ஆண்டவரே இதோ வருகிறேன் என்று தம்மையே அர்ப்பணித்து அருட்பணி புரியும் எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்தந்தையர், அருட்கன்னியர், பொதுநிலையினர் அனைவரும் உமக்குப் பிரமாணிக்கமாய் இருந்து, உமக்குச் சான்று பகர்ந்து, கிறிஸ்தவ சமுதாயக் கடமைகளை நிறைவேற்றி வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) எம்மைக் கரம் பிடித்து வழி நடத்துகின்ற அன்பு இறைவா, உம்முடைய அழைத்தல் துறவற அழைத்தலாகவோ, இல்லற அழைத்தலாகவோ எதுவாக இருந்தாலும் ஒவ்வொரு அழைத்தலும் நீர் வழங்கும் அருட்கொடை என்பதை உணர்ந்து அதை மகிழ்வுடன் ஏற்று அர்ப்பணிப்புடன் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

3) எம்மைப் படைத்துக் காத்து வழி நடத்திவரும் அன்பு இறைவா, எம் நாட்டை ஆள்வோரை உம் திருக்கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். நாட்டின் ஒற்றுமைக்கும், இறையான்மைக்கும், மத நல்லிணக்கத்திற்கும் பங்கம் விளைவிக்காத சட்டங்களையும் திட்டங்களையும் இயற்றி, வேற்றுமையில் ஒற்றுமை என்ற நம் நாட்டின் உயர்ந்த பண்பாட்டினைக் கட்டிக் காத்திடும் நல்ல தலைவர்களாய் அவர்கள் விளங்கிட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

4) அன்பும் கருணையும் நிறைந்த இறைவா, எங்கள் குடும்பங்களின் தேவைகளை நீர் அறிவீர், எது எது எங்களுக்குத் தேவையோ, எவையெல்லாம் எங்களுக்கு அவசியமோ அவற்றையெல்லாம் எங்களுக்குத் தந்தருளும். குடும்பங்களில் அன்பு மேலோங்கவும், ஒற்றுமை நிலைக்கவும், ஒருவரையொருவர் புரிந்து, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# பொன்மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

எல்லாவற்றிலும் முழு நிறைவைத் தேடுபவர்
எப்போதும் மனநிறைவடையார். – டால்டாய்ஸ்

நினைப்பதுபோல் அனைத்தும் நடக்க விரும்பினால் மனவேதனைதான்.
நடப்பதை அப்படியே ஏற்கும் மனதில்தான் நிம்மதி பிறக்கும். –எபிக்டேடஸ்

முடிந்தவரை மனிதர்களுக்கு ஆறுதல் கூறுங்கள்
அறிவுரைகள் புத்தகங்களிலேயே கிடைத்துவிடும்.

தவறானவர்களின் தவறுகளை மன்னித்து அவர்களை அப்புறப்படுத்துங்கள்
அவர்களோடு உங்களை இணைத்துக் கொள்ளாதீர்கள்
இல்லை என்றால், அவர்கள் உங்களின் நலனை அழித்துவிடுவார்கள்.

பிறருக்குத் தீமை செய்யத்தான் ஆற்றல் தேவை
அன்பிருந்தால் அனைத்தையும் சாதிக்க முடியும். – சார்லி சாப்ளின்

எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலு முதலில்
இது தேவைதானா? என்று உங்களைக் கேளுங்கள்.
–மார்க்கஸ் அவ்ரேலியஸ்

ஞானமுள்ள இடத்தில் உணர்வுக்கும் சிந்தனைக்கும்
சண்டை சச்சரவே இருக்காது. – கார்ல் கெஸ்டோவ் யுங்

பணிந்து போ உன் தகுதியை உயர்த்தும்
துணிந்து போ உன் திறமையை உயர்த்தும். – ஆபிரகாம் லிங்கன்

நம் கவனம் எதில் தீவிரமாய் உள்ளதோ.....
அது நம்மில் விஸ்வரூபம் எடுக்கும். – எபிக்டேடஸ்

# சங்க இலக்கியச் சுவை



திருமதி.லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை

# சிறுபஞ்சமூலம்

இன்று சிறுபஞ்சமூலத்திலிருந்து ஒரு பாடலைக் காணும் முன் சிறுபஞ்சமூலம் என்றால் என்ன என்பதை அறிந்து கொள்வோம். சிறுபஞ்சமூலம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதனை இயற்றியவர் காரியாசான். இவர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர் எனச் சிறப்பாயிரம் கூறுகிறது. இவர் சமண மதத்தைச் சார்ந்தவர். இவரும் கணிமேதாவியாரும் ஒரு சாலை மாணாக்கராவர். பொதுவான அறக்கருத்துகள் பெரும்பான்மையும் சமண அறக்கருத்துகள் சிறுபான்மையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. காரியாசனின் இந்நூலில் கடவுள் வாழ்த்துடன் 97 வெண்பாக்கள் உள்ளன. கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து வேர்கள் சேர்த்துத் தயாரித்த மருந்து சிறுபஞ்சமூலம். இது உடல் நோயைத் தீர்க்கும். அதுபோல் இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள ஐந்து ஐந்து கருத்துக்களும், மக்கள் மனநோயைப் போக்குவன. ஆகையால், இந்நூல் சிறுபஞ்சமூலம் என அழைக்கப்பெற்றது.

பாடல்.

கண்வனப்பு கண்ணோட்டம் கால் வனப்புச் செல்லாமை
என் வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் – பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றால் கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான் நன் றென்றல் வனப்பு.

பொருள்:

1. பிற உயிர்களிடம் இரக்கம் கொள்ளுதல்இ காணும் கண்களுக்கு அழகு;
2. பிறரிடம் யாசித்து உண்ணும் பொருட்டுச் செல்லாமைஇ கால்களுக்கு அழகு;
3. தனது முடிவை துணிவுடன் உறுதியாக கூறுதல்இ ஆராய்ச்சிக்கு அழகு;
4. கேட்டோர் மிகவும் நன்று எனப் புகழ்ந்து பாராட்டுதல்இ இசைக்கு அழகு;

5. தன் குடிமக்களை வருத்தாமல் பாதுகாத்தல்இ நாட்டை ஆளும் அரசனுக்கு அழகு.

இவையே சிறுபஞ்சமூலம் கூறும் வனப்புகள் ஆகும். வனப்பு என்றால் அழகு என்று பொருள்.

திருவிவிலியத்தில்,

நலிவுற்றோரின் ஞானம் அவர்களைத் தலைநிமிர் செய்யும்;

பெரியார்கள் நடுவில் அவர்களை அமரச் செய்யும்.

உடல் அழகுக்காக ஒருவரைப் புகழ வேண்டாம்.

தோற்றத்துக்காக ஒருவரை இகழவும் வேண்டாம்.

பறப்பனவற்றுள் சிறியது தேனீ;

எனினும் அது கொடுக்கும் தேன் இனியவற்றுள் சிறந்தது;

நீ அணிந்திருக்கும் ஆடை குறித்துப் பெருமை பாராட்டாதே;

நீ புகழ் பெறும் நாளில் உன்னையே உயர்த்திக் கொள்ளாதே;

ஆண்டவரின் செயல்கள் வியப்புக்குரியவை;

அவை மனிதரின் கண்ணுக்கு மறைவாய் உள்ளன.

மாமன்னர் பலர் மண்ணை கவ்வினர்:

எதிர்பாராதோர் பொன்முடிப் புனைந்தனர்;

ஆட்சியாளர் பலர் சிறுமையுற்றனர்;

மாட்சியுற்றோர் மற்றவரிடம் ஒப்புவிக்கப் பெற்றனர்.

என ஏமாற்றும் தோற்றங்களை பற்றி சீராக் ஆகமம் 11 ஆம் அதிகாரம் இறைவசனங்கள் ஒன்று முதல் ஆறு முடிய எச்சரிக்கிறது.

இயேசுவுக்கே மகிமை.
லீமா விக்டோரியா, தமிழாசிரியை.

# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 78

அன்பகத் தில்லாஉயிர்வாழ்க்கைவன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று



### குறள் விளக்கம்

அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர் வாழ்க்கை வளமற்ற பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற் போன்றது.

### சிந்தனை

அறம் செய்யாதவனுடைய வாழ்க்கை பாலைவனத்தில் பட்டமரத்திற்கு ஒப்பாகும் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அன்பில்லாதவர் இருக்கின்ற இடம் ஒரு பாலைவனமாக இருக்கும். பட்டமரம் தளிர்த்ததைப்போன்று இருக்கும் என்கிறார். மரமும் பட்டுபோயிருந்து அது இலேசாகத் தளிர்த்திருந்து என்ன பயன். அதனால் பிறருக்கு நிழலும் கொடுக்க இயலாது, கனியும் கொடுக்க இயலாது. எனவே அது இருந்தும் பயனில்லை. அதுபோல் அன்பில்லாத மனிதர் இல்லாதிருத்தலே நலம் என்கிறார்.

வேதாகமத்தில் ஆண்டவர் தன்னுடைய சீடர்களோடு செல்லுகின்றபொழுது அங்கு ஓர் அத்திமரத்தைப் பார்க்கின்றார் (லூக்கா13:7). அது தளதளவென்று வளர்ந்திருக்கிறது ஆனால் எந்தக் கனியும் அதிலில்லை. பசியோடு வருகிறவர்கள் அதைப் பார்த்துவிட்டு வயிறெரிந்து செல்கின்றார்கள். எனவே அந்த மரம் இல்லாதிருந்தாலென்ன? எனவே ஆண்டவர் அம்மரத்தை சபித்துவிடுகின்றார். நீ இல்லாதிருப்பதே நல்லது என்கிறார்.

எனவே ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் அன்புகொண்டிருக்க வேண்டும். மற்றவர்களுக்கு நல்லதைச் செய்யவேண்டும். அப்படி வாழத்தான் ஆண்டவர் இந்த வாழ்க்கையை நமக்குத் தந்திருக்கின்றார். அவ்வாறு செய்யாதவர்கள் வாழாது இருப்பதே மேல் என வள்ளுவரும் குறிப்பிடுகின்றார். ஆண்டவர் இயேசுவும் குறிப்பிடுகின்றார்.





அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm